நமது

# ஈழநாடு

www.namathueelanadu.com





குரல் 06 மலர் 65 நவம்பர் 2025 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com





Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app


மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை. அவர்கள் காலத்தை உருவகிப்பவர்கள்

- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்



# விடுதலை புலிகளை பயங்கரவாதிகள், பாசிசவாதிகள் என்றவர்களுக்கு பதிலை வழங்கிய மாவீரர்நாள்

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை என்பதைப்போல தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் விதைகள் ஈழ மண்ணில் முளைத்துச் சடைக்கின்றன. டபுள் பொக்கற் வைத்த அனுரா வந்தாலும் சரி, தனிப்பொக்கற் வைத்த கோத்தபாய வந்தாலும் சரி, தமிழ் ஈழ நிலத்தின் அத்தனை மக்களும் எங்கள் மாவீரர்களுக்காகத் துயிலும் இல்லங்களில் ஒன்று சேர்வார்கள். அற்ப விடயங்கள் எங்கள் விடுதலைப் பயணத்தை ஒருபோதும் தடுத்துவிடாது. ஈழச்சனங்களின் இதயங்களில் எழுதப்பட்ட இந்த விடுதலை வேட்கையை எவரால் அழிக்க முடியும் என்ற கேள்வியை உலகமெங்கும் வாழ்கின்ற ஈழத் தமிழ் மக்கள் உணர்த்தியுள்ளனர்.




"எந்த நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்... சாவரும்போதிலும் தணலிடை வேகிலும் சந்ததி தூங்காது..." என்பதை அனைவருக்கும் தீர்க்கமாகச் சொல்லியிருக்கிறது தமிழீழத் தேசம். எங்கள் விடுதலைக்காகப் போராடிய புலி மாவீர்களைப் பயங்கரவாதிகள் என்று சொன்னவர்களுக்கும் பாசிசவாதிகள் என்று ஶ்ரீலங்கா அரசுக்கு ஒத்தோடி அரசியல் செய்தவர்களுக்கும் நவம்பர் 27 தமிழ் ஈழ தேசம் தக்கப் பதிலடியை வழங்கியிருக்கிறது. விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்றும் நினைவுகூர அனுமதியில்லை என்றும் இலங்கை அமைச்சர் பிமல் ரத்நாயக்கா கூறினார். ஆனால் எமது மண்ணின் மைந்தவர்களை, எமது விடுதலைக்காகப் போராடிய மானமா வீர்களை நினைவுகூர எந்த்த் தடைகள் வந்தாலும் துயிலும் இல்லத்தில் திரள்வோம் என்பதை ஈழத் தமிழ் மக்கள் உணர்த்தியுள்ளனர்.

### தமிழீழ தேசத்தின் புனிதநாள்

மாவீரர் நாள் என்பது ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் தம்மை ஆகுதி ஆக்கிய ஈழ நிலத்து வீரர்ளை அஞ்சலிக்கின்ற புனித நாள். விடுதலைத் தாகம் கொண்டு தமிழர் தேசம் எங்கும் விதைக்கப்பட்ட கல்லறைகள் கண் திறந்து பார்க்கும் உணர்வு மேலிடும் நாள். உணர்வுமயமாக மாத்திரம் இந்த நாள் முக்கியத்துவம் பெற்று முடிந்துவிடுவதில்லை. பண்பாட்டு ரீதியாவும் அறிவியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் இந்த நாள் முதன்மை பெறுகின்றது. இறந்தவர்களை வழிபடுதல் என்பது மானுட மாண்பு. தமிழ் சமூகத்தில் தெய்வ வழிபாடுகளும் போரில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் நட்டுச் செய்யப்படுகிற வழிபாடுகளும் பண்பாடாக இம் மண்ணில் தொன்றுதொட்டு நிலவுகிறது. அந்த வகையில் மாவீரர் நாள் என்பதும் மாவீரர் துயிலும் இல்லம் என்பதும் தமிழரின் பண்பாட்டுரிமை மையங்களாகும்.

இலங்கையிலும் இந்தியாவிலும் உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள பண்பாட்டு அடையாளங்களை உலக மரபுரிமைச் சின்னங்களாக ஐக்கிய நாடுகள் சபையின் யுனஸ்கோ அமைப்பு அங்கீகரித்துள்ளது. உலகமெங்கும் உள்ள பண்பாட்டுச் சின்னங்களை பேணுதலும் அதனை மக்கள் கொண்டாடுவதும் பன்னாட்டு விதிகளுக்கு இயைபானது. அப்படியிருக்க ஈழதேசத்தில் 2009 முள்ளிவாய்க்கால் போரின் முடிவில் மாவீரர் துயிலும் இல்லங்களை ஶ்ரீலங்கா அரசு தன் படைகளைக் கொண்டு சிதைத்தது. ஈழத் தமிழினம்மீது அறமற்ற வகையில் எப்படி இனவழிப்புப் போரைச் செய்து, இனப்படுகொலையைப் புரிந்ததோ அதேபோன்று அறமின்றி மாண்ட வீரர்களின் கல்லறைகளுடனும் யுத்தம் செய்து அழித்து. இருப்பிற்காகப் போராடிய விடுதலைப் போராளிகளின் இருப்பிடங்களும் சிதைக்கப்பட்டன என்பது ஈழ மண்ணில் நாம் சந்திக்கும் இருப்பு சார்ந்த இடரையும் ஒடுக்குமுறையின் கொடூரத்தையும் இந்த உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.



தீபச்செல்வன்

### இன்னமும் இராணுவமுகமாகத் துயிலும் இல்லங்கள்

அதற்குப் பின்னரும் துயிலும் இல்லங்களில் இராணுவமுகாங்கள் அமைக்ப்பட்டுக் குடியிருந்த மற்றொரு ஆக்கிரமிப்பும் அரங்கேறியது. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறிய போதும் இன்னமும் கோப்பாய் துயிலும் இல்லம், கொடிகாமம் துயிலும் இல்லம், முள்ளியவளை துயிலும் இல்லம், மல்லாவி ஆலங்குளம் துயிலும் இல்லம் என்பன இராணுவத்தின் பாரிய முகாங்களாக உள்ளனர். "என் உறவு விதைக்கப்பட்ட துயிலும் இல்லத்திற்கு நான் செல்ல முடியாமல் போனேன். என் பிள்ளை அனாதையாகக் கிடக்கிறான்..." என்ற வார்த்தைகளை நேற்றுக் கேட்டவேளை மனம் துடித்தது.

இலங்கை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் அண்மையில் செய்தியாளர் சந்திப்பில், இராணுவத்தின் வசமுள்ள துயிலும் இல்லங்களை விடுவிக்க அரசு இணங்கியுள்ளதாகக் கூறினார். அந்தச் செயலை இந்த அரசு நிறைவேற்றி இருந்தால் தமிழ் மக்களிடத்தில் ஒரு பெரிய நல்லிணக்க சமிக்ஞையை காட்டியதாக இருந்திருக்கும். ஆனால் இராணுவத்தின் வசமுள்ள எந்தத் துயிலும் இல்லங்களும் விடுவிக்கப்படவில்லை. ஒரு சில இடங்களில் பொலிஸார் முரண்பாடுகளில் ஈடுபட்ட நிலையில் அங்கிருந்து அவர்களை மக்கள் அப்புறப்படுத்தியுள்ளனர். அத்துடன் மணலாறு துயிலும் இல்லத்திற்கு மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குச் சென்ற மக்கள் அச்சுறுப்பட்டுள்ளனர்.

### பேரேழுச்சியில் தமிழீழம்

இந்த வருடம் மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ தேசம் எங்கும் பேரேழுச்சி கொண்டது. எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகளுடன் இயக்கப்பாடல்களும் ஒலித்தன. நகரப் பிரதான வீதிகளில் மாவீரர் நினைவு வளைவுப் பதாகைகளையும் மக்கள் கட்டி எழுப்பினர். பேருந்துகளிலும் வர்த்தக நிலையங்களிலும் தமிழர் நகரங்களிலும் ஆலயங்களிலும் இயக்கப்பாடல்கள் வழியாக மாவீரர்கள் நினைவுகொள்ளப்பட்டமை இம்முறை தாயகத்தின் பேரேழுச்சியை வெளிப்படுத்தியது. கடும் மழையின் மத்தியிலும் மக்கள் அலையலையாக கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வருகை தந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை தந்தார்கள். கடந்த ஆண்டைவிட மக்களின் எண்ணிக்கையும் அதிகமாயிருந்ததுடன் ஒழுக்கமைப்புக்களும் சிறப்பாக இருந்தது.

வடக்கு கிழக்கு எங்குமுள்ள துயிலும் இல்லங்களில் திரட்சிபெற்ற மக்கள் விண்ணீராலும் கண்ணீராலும் அஞ்சலி செலுத்தி தங்கள் தாகத்தையும் தலைமுறைக் கனவுகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். நிகரற்ற தியாகங்களாலும் அதியுன்னத வீரங்களாலும் அடையாளம் பெற்ற ஈழ விடுதலைப் போராட்டம், எங்கள் தேசத்தில் விதையாக இருந்து விடுதலைக்கும் சுதந்திர அமைதிக்கும் காலத்தை வழிப்படுத்தும் என்ற பெருநம்பிக்கையைப் பெற்றோம்.

2009இற்கு முந்தைய தமிழ் ஈழ தேசத்தை மாவீரர் நாள் நினைவுபடுத்தியது. அன்றைய காலம் எனில் மக்களுடன் போராளிகளும் சீருடைகளுடன் வந்து நின்று தீபங்களை ஏற்றிக் கண்ணீர் விட்டு மக்களுக்கு ஆறுதல் அளிப்பார்கள். தளபதிகளும் போராளிகளுமென மாவீரர் துயிலும் இல்லம் எழுச்சியுடன் இருக்கும். தமிழ் தேசியத்தை தோற்கடிக்கலால், இல்லாமல் செய்யலாம் என நினைப்பவர்களுக்கு மக்கள் தக்க பதிலை வழங்கியுள்ளார்கள். புலிகள் இல்லாத 16 ஆண்டுகளில் மக்கள் எவருடைய தலையீடும் இன்றி எவருடைய அழைப்புமின்றி துயிலும் இல்லத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் திரண்டமை வாயிலாக கனதி மிக்க செய்தியை உலகிற்கு மிகத் தெளிவாக வழங்கியுள்ளனர். இதுவே தமிழர்தேசம், இதுவே தமிழீழத் தேசம்.



# அநுர – தமிழரசுக்கட்சி சந்திப்பு

# தமிழின விடியலுக்கானதல்ல ஒரு சம்பிரதாய ஏமாற்றம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் இடையில் இரண்டு மாத இழுபறிகளுக்குப் பின்னர் கடந்த 19ஆம் திகதி நடத்தப்பட்ட சந்திப்பு, ஒட்டுமொத்தப் பார்வையில் 'ஏமாற்றம்' என்பதையே பிரதான பலாபலனாகத் தந்துள்ளது.

இச்சந்திப்பை இலங்கைத் தமிழரசுக்கட்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதியபோதிலும், ஜனாதிபதி அநுரகுமார அதை சம்பிரதாயபூர்வமான கடமையாகவே கையாண்டிருக்கிறார் என்பது மிகத் தெளிவாகவே தெரிகின்றது.

நாட்டில் நீண்டகாலமாகப் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி அநுரகுமார இதயசுத்தியுடன் இருந்திருந்தால், ஆட்சிக்கு வந்து 14 மாதங்கள் வரையில் அதற்கான அடியொன்றை முன்வைத்திருப்பார்.

ஆனால் ஜனாதிபதி அநுரகுமாரவோ அல்லது அவரது அரசாங்கத்தினரோ இதுவரை தமது தரப்பில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த எவ்வித முன்முயற்சிகளையும் முன்னெடுத்திருக்கவில்லை. மாறாக, 'தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்றே நாட்டில் இல்லை' என்பதை நிலை நிலைநிறுத்துவதற்கு வெள்வேறு தளங்களில் அத்தரப்பினர் செயற்பட ஆரம்பித்தனர் என்பது வெளிப்படையானது.

இத்தகைய பின்னணியில் தான் வேறு வழியின்றி தமிழரசுக்கட்சி எழுத்துமூலமாகக் கோரிக்கை விடுத்து, மீண்டும் நினைவூட்டல் அனுப்பியதன் விளைவாகவும், சிறிதரன், சாணக்கியன் போன்றவர்களின் தனிப்பட்ட கோரிக்கைகள் மற்றும் சுமந்திரனின் குறுந்தகவல் மூலமான ''தனிப்பட்ட நட்புரிமையின்' உந்துதலின் பின்னணியிலும் தான் அநுரகுமாரவுடன் ஒன்றரை மணி நேரம் சந்திப்பொன்று நடத்தப்பட்டது.

இது பல வலியுறுத்தல்களின் பின்னணியில் நடத்தப்பட்ட சம்பிரதாயபூர்வமான சந்திப்பாக இருந்ததேயன்றி, ஆக்கபூர்வமான சந்திப்பாக இருக்கவில்லை. அநுரகுமார நன்கறிந்திருக்கும் எல்லாப் பிரச்சினைகளையும் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகள் மீண்டும் கூறவும், ஜனாதிபதி அநுர அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறார்.

பின்னர், அந்த விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதி அநுர, 'அதிகாரிகளுடன் பேச வேண்டும்' 'தொடர்ந்தும் பேசுவோம்'. 'மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கவனமெடுப்போம்' 'விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கூறுகின்றேன்;' என்று மட்டுமே பதில்கள் அளித்திருந்தார்.

அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் கூட ஜனாதிபதியிடமிருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உடனடியான தீர்வுக்குரிய நம்பிக்கையான வார்த்தைகளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனென்றால் அவருக்கு பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்குவதற்குரிய உந்துதல் இருந்திருக்கவில்லை என்பது மிகத் தெளிவாகவே வெளிப்பட்டது.

அதுமட்டுமன்றி, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத மாகாணசபைகள் தொடர்பிலும் கூட தேர்தல்களை நடத்துவோம் என்று ஜனாதிபதி அநுர கூறிய போதும், அதற்காகக் காலவரையறையை அவர் வெளிப்படுத்தத் தயாராக இருக்கவில்லை.

தமிழ் அரசுக்கட்சி தனது இந்திய விசுவாசத்தை திருப்திப்படுத்துவதற்காக சற்றே அழுத்தமளிக்கும் வகையில் வினாக்களைத் தொடுத்தாலும் ஜனாதிபதி அநுர அதனைக் பொருட்படுத்தியிருக்கவில்லை. பழைய முறையில் தேர்தலை நடத்த சட்டத்தில் சிறிய திருத்தத்தைச் செய்து முன்னெடுக்க முடியும் என்ற போதும், தெரிவுக்குழு அமைத்து ஆராய வேண்டும், எல்லை நிர்ணயம் குறித்துக் கலந்தாலோசனை நடத்த வேண்டும் என்றெல்லாம் கூறி, ஜனாதிபதி அநுர 'பந்தை' பாராளுமன்றத்திடம் ஒப்படைத்துவிட்டுத் தப்பித்துவிட்டார். அத்தகையவர் தேர்தல் குறித்து எந்தவொரு உறுதிமொழியையும் வழங்கவில்லை.

மிக அண்மைய நெருக்கடியான திருகோணமலைக் கடற்கரையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் சுட்டிக் காட்டப்பட்டபோதும், ஜனாதிபதி மக்களின் உளவியல் மாற்றம் பற்றிப் பேசியிருகின்றமை வேடிக்கையான விடயம். புத்தர் சிலை விவகாரத்தில் தேரர்களும் அரச அதிகாரிகளும், சட்டம் ஒழுங்கு தரப்பினரும் தான் சம்பந்தப்பட்டிருக்கையில், மக்களின் உளவியலில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கூறுவது எந்த அடிப்படைகளிலானது என்ற கேள்வியை எழுப்புகின்றது. வழக்கமாக ஆட்சியாளர்களைப் போலவே அநுரவும் பௌத்த தேரர்களுக்கு அடிபணிந்து செல்லும் நிலைமையையும், காவியுடைக்குள் மறைந்திருக்கும் தந்திரத்தையும் பின்பற்றுகின்றார் என்பதை இது வெளிப்படுத்தியுள்ளது.

இறுதியாக, தமிழரசுக்கட்சி ஜனாதிபதி அநுரவைச் சந்திப்பதற்கான பிரதான காரணம் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பேசுவதாகும். தற்போது தேசிய இனப்பிரச்சினைக்கான அடிச்சுவட்டையே மறைப்பதற்கு முயலும் அரசாங்கம் அவ்விடயம் பற்றித் தெளிவாக எந்த விடயத்தினையும் வெளிப்படுத்தவில்லை.

ஜனாதிபதி அநுர தேசிய இனப்பிரச்சினையை வடக்கு, கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக மட்டுப்படுத்தியதோடு, நிரந்தரமான தீர்வு காண்பதற்கு 'புதிய தீர்வு' வேண்டும் என்று மட்டும் குறிப்பிட்டார். ஆனால் அந்தத் தீர்வு எத்தகையது, எங்கிருந்து ஆரம்பிக்கப்படப் போகின்றது என்பது குறித்துத் தெளிவான விடயங்கள் எவையுமே இல்லை.

ஆக, தமிழரசுக்கட்சியுடன் ஜனாதிபதி நடத்தியுள்ள பேச்சுக்கள், ஊடகங்களுக்குத் தலைப்புச் செய்தியைக் கொடுத்திருந்தாலும், தமிழ் மக்களுக்குத் தீர்வுகளை வழங்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை. அந்தவகையில் இச்சந்திப்பு பயனற்றதொன்றாகவே முடிந்திருக்கிறது. தமிழரசுக்கட்சி தீர்வுகளைத் தேடி மட்டும் இந்தச் சந்திப்பை நடத்தவில்லை, தமிழ் மக்களின் பிரதான மக்கள் பிரதிநிதிகள் தாங்களே என்று நிறுவுவதற்காகவும் இந்தச் சந்திப்பை நடத்தியுள்ளது.

ஆனால், அச்சந்திப்பைக் கூட ஒருங்கிணைந்ததாக முன்னெடுத்திருக்கவில்லை. குழுக்கூட்டமொன்றை நடத்தி, பேசப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகத் திட்டமிடலைச் செய்திருக்கலாம். அநுரவுக்கு அழுத்தமளிக்கும் உபாயங்களை வகுத்திருக்கலாம். ஆனால், அவ்விதமான செயற்பாடுகள் எவையுமே முன்னெடுக்கப்படாமல், வெறுமனே ஜனாதிபதிக்கு முன்னால் சென்று தமக்குள் காணப்படுகின்ற உட்கட்சிப் பூசல்களையும் வெளிப்படுத்தி அம்பலப்பட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மிகக் கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார். வட, கிழக்கு மாகாணங்களில் குழப்பங்கள் ஏற்படுத்தப்படக்கூடாது என்ற நோக்கில் சகல தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், தமிழ் அரசுக்கட்சி அதனை முறித்துவிட்டது.

அவ்வாறிருக்கையில், காணி அபகரிப்பு, அரசியல் கைதிகள், பௌத்த சின்னங்கள் நிறுவப்படல் உள்ளடங்கலாக சகல தமிழர் பிரச்சினைகளிலும் முன்னைய அரசாங்கங்களின் அணுகுமுறையே தற்போதைய அரசாங்கத்தினாலும் பின்பற்றப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை ஜனாதிபதியை சந்தித்திருக்கும் தமிழ் அரசுக்கட்சி தமிழர் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டுவதற்கான எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக தமிழ் அரசுக்கட்சி மைத்திரிரணில் அரசுடன் கூட்டிணைந்து 20162018வரையில் ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முடக்கும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளையே மீளவும் தொடர்வதற்கு அநுரவுடன் காணப்பட்டுள்ள இணக்கமானது, தமிழினத்தின் விடியலை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

ஆகவே, புலத்திலும், நிலத்திலும் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பை தமிழர் தேசத்தில் நிலைநிறுவத்துவதற்காக, தமிழ் அரசுக்கட்சியின் தமிழின விரோத இணக்கப்பாட்டுக்கு எதிராக அணிதிரள வேண்டியது உடனடித் தேவையாகின்றது.

இந்தப்புரிதலின்றி, இடதுசாரித்துவ அரசாங்கம், தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்கப்போகின்றது என்றோ, தமிழ் அரசுக்கட்சி நீதியான தீர்வை பெற்றுத்தரப்போகின்றதென்றோ எதிர்பார்ப்புடன் இருப்பதானது, ஒட்டுமொத்த தமிழினமும் மீண்டும் மீளமுடியாத நிலைமைக்கு வலிந்து தள்ளப்படும் பேராபத்தே நிகழ்ந்தேறும்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com

குரல் 06 மலர் 63 ஒக்டோபர் 2025 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# 2025 மாவீரர்கள் நாளும் தமிழ்த் தேசியத்தின் சாகாத பெரு நெருப்பும்

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியத்தின்பால் நிற்கும் அனைத்து மக்களும் பங்கெடுத்து, உணர்வெழுச்சியுடன் முன்னெடுத்த 2025 ஆம் ஆண்டுக்கான மாவீரர்கள் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள், ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலை வேட்கையை மீண்டுமொருமுறை உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்திருக்கின்றன.

இந்த மண்மீட்பு போராட்டம்;, வெறும் அஞ்சலியாக மட்டும் நின்றுவிடவில்லை. அது தமிழினத்தின் அரசியல் அபிலாஷைகளை, அதன் வேரிலிருந்து புறப்பட்டு, முன்னெடுத்துச் செல்லும் மகத்தான உந்துசக்தியாக, புதிய தேசியப் பிரகடனமாக மாறியுள்ளது.

தாயக மண்ணில், அடக்குமுறைகள் பல்வேறு வடிவங்களில் இன்னமும் தொடர்கின்றபோதும், காலத்தால் சாகாத விதைகளாகிப்போன வீரமறவர்களை மக்கள் நெஞ்சங்களில் சுமந்துவந்து, விளக்கேற்றி வீரவணக்கம் செலுத்தியமை, தமிழ்த் தேசியத்தின் அசைக்க முடியாத ஒருமைப்பாட்டையும், இலட்சிய உறுதிப்பாட்டையும் நிரூபித்துள்ளது.

மாவீரர் துயிலுமில்லங்களில் திரண்ட மக்கள் வெள்ளம், எந்தவொரு இராணுவ அல்லது அரசியல் கெடுபிடிகளுக்கும் அஞ்சாமல், தியாகத்தின் புனிதத்துவத்தை மீளுருவாக்கம் செய்ததுடன், சிறிலங்கா அரசின் அரசியல் அடக்குமுறைக்கு எதிரானவொரு அமைதிப் போராட்டமாகவும் வீறுகொண்டு வெளிப்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கு முடியாது.

தமிழின விடுதலைப் போரில் தமது இன்னுயிரை ஈந்த மாவீரர்களின் தியாகமே தமிழ்த் தேசியத்தின் அடித்தளமாக நிலைபெற்றுள்ளது. அவர்கள் கண்ட கனவு, சமத்துவமான, சுதந்திரமான, இறைமையுள்ள தமிழீழமாகும்.

அன்று அவர்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டு தாங்கி நின்ற இலட்சியத்தை, தற்போது மக்கள், தமது உணர்வுபூர்வமான திரட்சியின் மூலம், உலகிற்கு உணர்த்திய வண்ணம் கைகளில் தாங்கி நிற்கின்றனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எதிராகச் சிறிலங்கா அரசு இம்முறை வழக்கத்துக்கு மாறாக கெடுபிடியாக நடந்து கொள்ளவில்லை. இதுவொரு தற்காலிகமானது என்றாலும், சமகாலத்தில் தனது சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புக்களைத் திட்டமிட்டு முன்னெடுக்கவே விளைந்திருந்தது.

குறிப்பாக தமிழீழ தலைநகரத்தில் புத்தர் சிலைகளை நிறுவியும், கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பதாகைகளை வைத்தும் ஆக்கிரமிப்பு முயற்சிகளை ஆரம்பித்திருந்தது. இந்தச் செயற்பாடுகளுக்கு பதிலடி வழங்கும் வகையிலும், எந்தவொரு அரசியல் தீர்மானத்திலும் மக்களின் உணர்வுகளே இறுதியானவை என்பதைச் சுட்டிக்காட்டும் வகையிலும், மக்களின் இந்த மாபெரும் அணிதிரள்வு அரசாங்கத்துக்கு உறுதியான எச்சரிக்கை சமிக்ஞையைக் காண்பித்துள்ளது.

தாயகத்தின் நினைவேந்தல் உணர்வெழுச்சியானது, தமிழர்களின் தாயகக் கோட்பாட்டிற்கும், சுயநிர்ணய உரிமைக்கும் மிக வலுவான சான்றாதாரத்தினை வழங்குகின்றன. இந்த உணர்வுபூர்வமான எழுச்சி, தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் மற்றும் புலம்பெயர் உறவுகளுக்கும் தெளிவான செய்தியை வழங்குகிறது.

தமிழினத்தின் விடுதலைக்கான பயணம் எந்தச் சவாலிலும் நிறுத்தப்படவில்லை. இனிவரும் ஒவ்வொரு காலச் சவாலுக்கும் மத்தியிலும், மாவீரர்கள் காட்டிய இலட்சியப் பாதையில், நீதியான நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய உறுதியான பயணத்தை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

மீண்டும் ஒருமுறை தியாகத்தின் மகத்தான வலிமையையும், தேசியத்தின் வீச்சையும் உணர்த்தியுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான மாவீரர்கள் நாள், தமிழினத்தின் விடுதலையை முன்கொண்டு செல்ல புதிய உத்வேகத்தையும், செயல்வேகத்தையும் வழங்குகிறது.

இந்த உணர்வெழுச்சியை அணைத்துக்கொண்டு, ஒன்றுபட்டு நின்று, இலட்சியத்தை அடையும்வரை ஓயமாட்டோமென உறுதிகொள்வது, ஒவ்வொரு தமிழினப் பொதுமகனின் தலையாய கடமையாகிறது. இதுவெறும் நினைவு கூரல் அல்ல. இது போராட்டத்தின் தொடர்ச்சியைப் பிரகடனம் செய்யும் தேசியக் கடமையாகும்




வரலாறு மறவாத மனிதராய்
உயிரை உயிரோடு கலந்திட்ட
உங்கள் தியாகத்திற்கு
ஈடோது அறியோம்.
கார்த்திகை பூக்களே!
காற்றும் கடலும்
சோலையும் சுனையுமாய்
எங்கள் வாழ்வோடு
வாழ்வதை நாம் அறிவோம்
நீங்கள் எங்கள் வாழ்வோடு
வாழ்வதை நாம் அறிவோம்.

தொழுகின்ற பொழுதெல்லாம்
கார்த்திகை திங்களாய்
பூத்திடும் மலர்களாய் நீங்கள்
நெஞ்சம் பூத்திடும்
மலர்களாய் நீங்கள்.

சுவடுகள் மறையாத
நெடுந்தூரம் பயணத்தில்
நினைவுகளில்
உயிர்த்தெழும் நீங்கள்
இன்னும் இருக்கிறீர்
எம் இறைமைக்கு சான்று.
செண்பக குருகுகளே!
வீரமும் வேள்வியும்
அறத்தின் நல்ல காவலுமாய்
எழுகின்ற நாவெல்லாம்
செயலாய் உருக்கொண்டு
வழிகாட்டும் பாதைகள்
திருநாட்டின் வெளிச்சம்.

தொழுகின்ற பொழுதெல்லாம்
கார்த்திகை திங்களாய்
பூத்திடும் மலர்களாய் நீங்கள்
நெஞ்சம் பூத்திடும்
மலர்களாய் நீங்கள்.



தீப்பொறிகளாய்
காட்டுத் தீப்பொறிகளாய்
நாடெங்கும் பரவி
உலக நாடெங்கும் பரவி
வாழ்கின்ற தமிழரால்
என்றும் புதிய வரலாற்று
செம்மல்களாய் நீங்கள்.
தமிழர் ஒற்றுமையின்
குறிகாட்டி நீங்கள்.
தமிழர் இதயத்தின்
உயிர்நாடி நீங்கள்.
தமிழர் தாரக மந்திரமும்
செங்கொடியும் நீங்கள்.
வழிபடும் சாமியும்
சரித்திரமும் நீங்கள்.
வழிபடும் சாமியும்
சரித்திரமும் நீங்கள்.

தொழுகின்ற பொழுதெல்லாம்
கார்த்திகை திங்களாய்
பூத்திடும் மலர்களாய் நீங்கள்
நெஞ்சம் பூத்திடும்
மலர்களாய் நீங்கள்.

லதா கந்தையா

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து





# வட, கிழக்கை மறந்த அநுரவின் பட்ஜட் 2026

தேசிகன்

இலங்கையின் 80ஆவது வரவு, செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும் நிதியமைச்சருமான அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார மீட்சியை இலக்காகக் கொண்டு பல்வேறு அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் வெளிப்படுத்தியுள்ளார். எனினும், இத்திட்டங்களின் அடிப்படை நிதிப்போக்குகள் குறிப்பிடத்தக்க சவால்களைக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் நிதிக் கணிப்பீடுகளின்படி, 2026ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானம் 5,300 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பல்வேறு துறைகளுக்கான அதிகரித்த நிதி ஒதுக்கீடுகள் காரணமாக மொத்தச் செலவீனம் 7,057 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

இதன் விளைவாக, வரவு, செலவுத் திட்டத்தில் 1,757 மில்லியன் ரூபா துண்டுவிழும் தொகை ஏற்பட்டுள்ளது. இந்த மிகப்பெரிய துண்டுவிழும் தொகையானது, மொத்தச் செலவீனத்தில் ஏறத்தாழ காற்பங்கிற்கும் அதிகமாகும். இப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் பெறுவது அவசியமாகிறது, இது நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமையை மேலும் அதிகரிக்க வழிவகுக்கும்.

பொருளாதாரப் பாதிப்புகளுக்கு மத்தியில் இந்த வரவு, செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான உடன்பாடுகளை மையப்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பற்றாக்குறையைக் குறைத்து, அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று பேராசிரியர் காமினி வீரசிங்க போன்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

அரச வருமானம் இலக்குகள் 15.3சதவீதம் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், இந்தத் துண்டுவிழும் தொகையானது, வருவாய் இலக்குகளை அடைவதிலும் நிதிக் கட்டுப்பாட்டிலும் உள்ள சவால்களைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

செலவீனங்கள் அதிகரித்ததற்கான காரணங்களைப் பார்க்கும் போது, அரச ஊழியர்களுக்கான சம்பள திருத்தங்களின் இரண்டாம் கட்ட நடைமுறைக்காக 110 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியம் 1,750 ரூபாவாக உயர்த்தப்பட்டமை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவு 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமை போன்ற மக்கள் நலன்சார்ந்த முன்மொழிவுகளே முக்கிய காரணமாகும். அத்துடன், சுகாதாரத்துறைக்கு (554 பில்லியன் ரூபா) மற்றும் கல்வி (301 பில்லியன் ரூபா) போன்ற மக்கள் நலன்சார் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் 2025ஆம் ஆண்டை விட கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம், அரச வருவாயை நேரடியாக வரி (60மூ) மற்றும் மறைமுக வரி (40மூ) என்ற விகிதத்திற்குக் கொண்டு வருதல், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகம், முதலீட்டாளர்களுக்கு வதிவிட விசா போன்ற முன்மொழிவுகள் முற்போக்கான பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளன.

எனினும், ஒவ்வொரு ஆண்டும் வரவு, செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் அனைத்தும் முறையாகச் செயற்படுத்தப்படுவதில்லை என்ற பொதுமக்களின் அவநம்பிக்கையை வெற்றிகொள்ள வேண்டிய நிலைமைகள் தாராளமாகவே உள்ளன.

எனவே, வாழ்க்கைச் செலவைக் குறைத்து மாதச் சம்பளத்திற்கும் வாழ்க்கைச் செலவுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்புகள், அதிகரித்த செலவினங்களால் ஏற்படும் பணவீக்க அழுத்தத்தால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

இப்படியான சூழ்நிலையில், தமிழ் மக்களை மையப்படுத்தியதாக இந்த வரவு, செலவுத்திட்ட முன்மொழிவுகளை நோக்கினால், எந்தவொரு நன்மைகளும் இல்லை என்று ஒரே வார்த்தையில் இலகுவாகக் கூறக்கூடிய நிலையே உள்ளமையானது துரதிஷ்டவசமாகும்.

2026ஆம் ஆண்டுக்காக பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்களுக்காக 64800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2025ஆம் ஆண்டை விட 3055 கோடியே 50 இலட்சம் ரூபா மேலதிக ஒதுக்கீடாகும். போர் நிறைவுக்கு வந்தபோதும், வட, கிழக்கில் முப்படைகளையும் நிலைகொள்ளச் செய்வதற்காக வருடாந்தம் கடந்த கால அரசாங்கங்கள் பாரிய அளவில் பாதுகாப்புத்துறைக்கு நிதி ஒதுக்கீட்டைச் செய்துவந்தன. அதன் நீட்சியாகவே அநுர அரசாங்கமும் பாதுகாப்புத்துறைக்கான ஒதுக்கீட்டைத் தனது பங்கிற்கும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, வரவு, செலவுத்திட்ட உரையின்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக அநுரகுமார தவறியேனும் ஒரு வார்த்தைகளையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை. வெறுமனே மாகாண சபைகளுக்கான தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக மட்டும் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான காலப்பகுதியை அவரால் அறிவிக்க முடிந்திருக்கவில்லை. அவர் 'பந்தை' பாராளுமன்றத்திடம் ஒப்படைத்துவிட்டுத் தப்பித்துக்கொண்டுள்ளார்.

முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தினை உருவாக்கப்போவதாக அறிவித்திருக்கின்றார். ஆனால், வடக்கிலும், கிழக்கிலும் முதலீட்டாளர்கள் வருகை தருவதற்குப் பாதுகாப்பான சட்டமல்ல முக்கியமாக உள்ளது. மாறாக, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதுதான் முக்கியமானது என்பது அநுரகுமாரவுக்கு இன்னமும் புரியாதிருப்பதற்கு வாய்ப்பில்லை. அவர் அந்த விடயத்தினைத் திட்டமிட்டே தவிர்த்திருக்கின்றார் என்பது வெளிப்படையானது.

பொதுப்படையில் காணப்படும் மாற்றுத்திறனாளிகள், வறுமைக்கோட்டுக்குள் வாழ்பவர்கள், கடற்றொழிலாளர்கள் உள்ளிட்டவர்களை மையப்படுத்திய நலத்திட்ட அறிவிப்புக்கள் வடக்கு, கிழக்கிற்கும் பொருந்துகிறதே தவிரவும், போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான விசேட ஒதுக்கீடுகள் எவையும் குறிப்பிடும்படியாக இல்லை. அதேபோன்றுதான் பலாலி சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளபோதும், காங்கேசன்துறைமுக மேம்பாடு பற்றி மௌனம் கலைக்கப்படவில்லை.

ஆகவே, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள இந்த வரவு, செலவுத் திட்டம், அதன் இலக்குகளை அடைவதற்கு, நிதி நிர்வாகத்தில் சமநிலையுடன் கூடிய 'இறுக்கமான பிடிப்பு' அவசியமாகிறது.

1,757 மில்லியன் ரூபா என்ற துண்டுவிழும் தொகையின் சுமையைக் குறைப்பதற்கு, அரசாங்கம் உடனடியாக வருமானம் ஈட்டுவதற்கான புதிய மற்றும் திறமையான வழிகளைக் கண்டறிவதிலும், அதேசமயம் அத்தியாவசியமற்ற மற்றும் பயனற்ற செலவினங்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அறிவிக்கப்பட்ட திட்டங்களைச் சிறப்பாக நிர்வகித்து, எதிர்பார்க்கப்பட்ட வருவாயை முழுமையாக ஈட்டினால்தான், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டம் அதன் இலக்குகளை அடைவதுடன், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் வலுசேர்க்கும்.

இல்லையெனில், அநுரகுமாரவின் இந்த வரவு, செலவுத் திட்டம் உறுதியான பாதையை வழங்குகிறதா அல்லது வாக்குறுதிகளால் சோர்வுற்ற மக்களை வசீகரிக்கும் மாயையா என்ற கேள்விகள் நிறைந்ததாகவே இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்களுக்கு இடமில்லை.

இதேவேளை, தேர்தலொன்று அண்மித்தகாலத்தில் இல்லையென்பதையும் வரவு,செலவுத்திட்டம் அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. அதன் பலனாகவே, வட,கிழக்குக்கு எந்தவொரு விசேட ஒதுக்கீடுகளையும் வழங்குவதற்கு அநுர அரசாங்கம் முன்வரவில்லை என்பது வெளிப்படையான விடயமாகின்றது.

இதில் ஆச்சிரியப்படுவதற்கும் எதுவுமில்லை. ஏனென்றால், வடக்கு,கிழக்கு மக்கள் சலுகைகளுக்க விலைபோபவர்கள் இல்லை என்பதை உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முடிவுகள் மிகத்தெளிவாக அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருகோணமலையில் புத்தர்சிலை:

# ‘சட்டத்தின் ஆதிக்கத்தை சிதைக்கும் இன-மத வாதம்’



தந்திரீகன்

திருகோணமலையில் சட்டவிரோதமாக நிறுவப்பட்டு, பின்னர் அகற்றப்பட்டும், மறுநாளே இரவோடிரவாக மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரம், இலங்கையின் 77 ஆண்டுகால இன–மத அரசியல் இன்னும் குணமடையாத நோயாகத் தொடர்வதை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் வெறுமனே ஒரு மதச் சின்னத்தைப் பற்றிய சிறிய பிரச்சினை அல்ல் மாறாக, குறுகிய அரசியல் லாபங்களுக்காக மத உணர்வுகளைத் தூண்டி, பெரும்பான்மையின் ஆதரவைப் பெற திட்டமிட்ட முயற்சியின் வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது.

இந்த மூன்று நாள் அரசியல் நாடகம், சட்டத்தின் மேலாதிக்கம் குறித்த நம்பிக்கையை உடைத்துவிட்டது. நவம்பர் 16ஆம் திகதி, 50க்கும் மேற்பட்ட பொலிஸாரின் பாதுகாப்பிற்கு மத்தியில், திருகோணமலைக் கடற்கரையோரத்தில் ஒரு புத்தர் சிலை சட்டத்தை மீறி நிறுவப்பட்டது.

சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவிய இந்தக் காட்சி, உள்ளூர் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே கடும் எதிர்ப்பைக் கிளப்பியது. அந்த எதிர்ப்பின் காரணமாக, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் உத்தரவின் பேரில் சிலை அகற்றப்பட்டது. இது சட்டத்தின் மேலாதிக்கம் நிலைபெறும் என ஒருசில மணி நேரம் நம்பப்பட்டது.

ஆனால், மறுநாள் நவம்பர் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் அமைச்சர் விஜேயபாலவின் நிலைப்பாடு முற்றிலும் தலைகீழாக மாறியது. சிலை ‘பாதுகாப்புக்காக’ அகற்றப்பட்டதாகவும், அது மீண்டும் அதே இடத்தில் நிறுவப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து சிலை இரவோடிரவாக மீண்டும் வைக்கப்பட்டது. அரசின் நிலைப்பாடு இவ்வாறு தலைகீழாக மாறியதால், சட்டத்தின் மீதான மக்களின் நம்பிக்கை பெரிதும் குலைந்தது. இந்தப் பழைய விளையாட்டின் புதிய அத்தியாயமாக, இந்த விவகாரம் பாராளுமன்றத்தில் பெரும் விவாதத்துக்கு வழிவகுத்தது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் கருத்துக்களை முன்வைத்து, அரசை ‘பௌத்த விரோதம்’ என்று சித்திரிக்க முயன்றார். திருகோணமலைச் சிலை ஒரு தேசியப் பிரச்சினை என்றும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மகாநாயக்க தேரரின் ஆலோசனையைக் கேட்டுச் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சஜித்தின் இந்தக் கருத்துக்கள், மத உணர்வுகளைத் தூண்டி அரசியல் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் இலங்கையின் பழைய யுக்தியை மீண்டும் வெளிப்படுத்தியது. இந்த அரசியல் சூழ்ச்சிக்கு நாமல் ராஜபக்ஷ தலைமையில் நவம்பர் 21 அன்று நடைபெற்ற எதிர்ப்புக்கூட்டமும் பின்னணியாகும். இதனால், அவரை நம்பி வாக்களித்த தமிழ்க் கட்சிகளும், தமிழ் மக்களும் இன்று ஏமாற்றமடைந்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) இனவாதம் அற்றது என்று எண்ணி வாக்களித்தவர்கள்தான் இது பற்றிக் கவலைப்பட வேண்டும். ஏனெனில், தமிழர் தரப்புக்கள் கவனிக்க வேண்டியது ஜேவிபி பற்றியல்ல, ஜனாதிபதித் தேர்தலின் போது நீங்கள் ஆதரித்த சஜித் பிரேமதாச பற்றித்தான் நீங்கள் கவலைப்பட வேண்டும்.

‘இனவாதிகள் இல்லை’ எனச் சொன்னதை நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கும், உங்களுக்கு வாக்களித்த சிங்களர் அல்லாத வாக்காளர்களுக்கும், இன்று நாட்டில் ஆட்சி மட்டும்தான் மாறியிருக்கிறதா, பௌத்தவாதத்தைத் தூக்கி அரசியல் செய்பவர்கள் இன்றும் இப்படிச் சுதந்திரமாகவே இருக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

தமிழர் சமூகத்தின் விரக்திக்கு இந்தச் சம்பவம் ஓர் அடித்தளமாக அமைந்துள்ளது. ஏனெனில், மதச் சின்னங்களை அமைப்பதில் சமூக ஒப்புதல், சட்ட அனுமதி, உள்ளூர் மக்கள் உணர்வுகள் — எதுவும் கருத்தில் கொள்ளப்படவில்லை. தமிழர் சமூகத்துக்கு இதுவொரு மதச் சின்னம் அல்ல, மாறாக, தொடர்ச்சியான அரசியல் குறியீடு என்ற உணர்வு அதிகரித்துள்ளது. கடந்தகால அநீதிகள் மீண்டும் மறுபடியும் நிகழக்கூடும் என்ற அச்சமும் உயிர்த்தெழுந்துள்ளது.

சட்டத்தின் சிக்கலைப் பார்த்தால், சட்டவிரோத அமைப்புகள் அகற்றப்பட வேண்டும் என்பது அடிப்படை. ஆனால் இலங்கையின் இன–மத அரசியலில் சட்டம் பல நேரங்களில் ‘தெரிவுக்குரிய’ ஒன்றாக மாறிவிடுகிறது. சிலையை அகற்றினால், பௌத்த தேசியவாத எதிர்ப்பு; அகற்றாவிட்டால், தமிழ்–முஸ்லிம் மக்கள் எதிர்ப்பு—இந்த இரண்டுக்கும் மத்தியில் அரசு எப்போதும் பெரும்பான்மையை மகிழ்விக்கும் வழியையே தெரிவுசெய்கிறது.

இதுவே நாட்டில் சமத்துவம் என்ற கருத்தை பலவீனப்படுத்துகிறது. இலங்கையின் அரசமைப்பு நாடு ஒன்றாக உள்ளது எனக் கூறினாலும், அரசியலின் களத்தில் அது இன அடிப்படையில் துண்டிக்கப்பட்டுள்ளதாகவே யதார்த்தமான நிலை கூறுகிறது.

இந்த விவகாரத்தின் பின்னணியில் நிலவும் காணி விவகாரம் மேலும் சிக்கலானது. திருகோணமலை மாநகர மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து பிரட்றிக் கோட்டை வாசலுக்குச் செல்லும் சாலையில், 2008ஆம் ஆண்டு அப்போதைய குடியரசுத் தலைவர் மகிந்த இராஜபக்சவால் ஸ்ரீ சம்புத்த ஜெயந்தி போதி வர்த்தன சமிதிய என்னும் ஓர் அறக்கட்டளைக்கு 40 பேர்ச் பரப்பளவுள்ள வேறொரு காணி நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணி 2014ஆம் ஆண்டு உறுதி மாற்றி வழங்கப்பட்டுள்ளது. இந்த இடம், 1957ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டுவருவதாகக் கூறிப் பதியப்பட்ட முதல் இடத்திலிருந்து வேறானது. 2008ஆம் ஆண்டு குத்தகைக்கு பெற்ற காணியில், எவ்வாறு 2003ஆம் ஆண்டு தர்மப் பள்ளி பதியப்பட்டு நடத்தி வர முடியும் என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மிக முக்கியமாக, 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐந்தாம் நாள் அளவீடு செய்த நில அளவைத் திணைக்களமானது, குறித்த காணி கடலோர ஒதுக்குப் பகுதி என்றும், அது எதுவித கட்டடமும் அமைக்கப்பட முடியாத வலயம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், 2004ஆம் ஆண்டின் சுனாமிக்குப் பிந்திய கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவச் சட்டத்திற்கு அமைய, கடற்கரையோரத்திலிருந்து 20 மீற்றருக்குள் எந்தக் கட்டடத்தையும் கட்ட சட்ட அனுமதி இல்லை.

இருப்பினும், தற்போதைய இந்தத் தர்ம பள்ளியை கரையோரத்தில் இருந்து 10 மீற்றர் தூரத்திற்குள் அமைக்க முனைவது, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

இத்தகைய பேரிடர் மீண்டும் ஏற்பட்டு மனித உயிர்கள் காவு கொள்ளப்படாமல் இருக்க வேண்டுமென்றால், இந்த இடத்தில் எவ்வித கட்டடமும் கட்டுவது பொருத்தமானது அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொண்டு, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த அரசும் நீதித் துறையும் ஆவன செய்ய வேண்டும்.

கார்ல்ஸ் மார்க்ஸ் கூறியது போல, “மதம் என்பது அபினைப் போன்றது” என்பதற்க இணங்க பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர் சிலரின் செயல்பாடுகளிலிருந்து அது உண்மை என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. அதாவது, எதிர்க்கட்சியினர் கூட, இன, மத வாதம் அற்றவர்கள் போலக் காணப்பட்டாலும், அகச் சூழலால் மாற்றப்படாதவர்கள் ஆகவும், உண்மையில் இன, மத, வாதத்தினை தூக்கிச் சுமப்பவர் ஆகவும் உள்ளனர்.

எனவே, இத்தகைய சூழலைக் கடந்து, தமிழ் மக்களுக்குப் பொருள்பூர்வமான அதிகாரப் பகிர்வினை வழங்கி, இன அடிப்படையிலான பதற்ற மூலங்களைப் பிரித்து நிர்வகிப்பதன் மூலம் மட்டுமே நாட்டின் நீண்டகால சமாதானம் சாத்தியமாகும். இல்லையெனில், இந்த ஏமாற்றம் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலப் பார்வையையே மாற்றும் சக்தி கொண்டதாகிவிடும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழ் மக்கள் உட்பட அனைவரின் நம்பிக்கையையும் மீட்டெடுக்க, மௌனத்தை விட வெளிப்படைத்தன்மையையும், ஒருதலைப் பட்சத்தை விடச் சமத்துவத்தையும், குறுகிய அரசியலை விட மக்கள் உணர்வுகளையும் முன்னிறுத்த வேண்டும். அதற்காக இன,மத வாத கட்டமைப்புக்களை தாண்டி செயற்பட வேண்டும். இன,மத வாதத்தின் பிடிகளை தளர்த்தினால் மட்டுமே சுபீட்சமான எதிர்காலம் நிலைக்கும்.

# புலிக்கொடியை அங்கீகரித்தமை ஈழத் தமிழர்களுக்கு பெருமகிழ்ச்சி ஸ்ரீலங்காவுக்கு அதிர்ச்சி




## தமிழ் தேசிய ஆய்வு அமையம் அறிக்கை

தமிழீழத் தேசியக் கொடியை அங்கீகரித்தமை வாயிலாக கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் உலகில் முன்னுதாரணமாக செயற்பாடு ஒன்றை ஆற்றியுள்ளதாக தெரிவித்துள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம் உலகின் அனைத்து நாடுகளும் ஈழத் தமிழ் மக்களின் தேசிய அட்டயாளங்களை ஆதரிப்பதுடன் தனித் தமிழர் தேசத்தையும் ஆதரிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளது. கனடாவின் பிரம்டன் நகரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிக் கொடியை கடந்த நவம்பர் 21ஆம் நாளன்று – மாவீரர் வார ஆரம்ப நாளில் அங்கீகரித்துள்ளமை குறித்து நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் விடுத்துள்ள முமையான அறிக்கை வருமாறு:


CITY OF BRAMPTON

PROCLAMATION

**Tamil Eelam National Flag Day**

**WHEREAS:** Every year on November 21, Eelam Tamils worldwide commemorate Tamil Eelam National Flag Day. This day symbolizes the collective identity of the Eelam Tamil nation and their ongoing resistance to the genocide perpetrated against them since the 1930s.

The Voice of Global Tamil Rights is an organization dedicated to advocating for international justice for the Tamil genocide, preserving and archiving Tamil history, and advancing the right to self-determination of Eelam Tamils.

On this day, the Tamil Eelam National Flag is ceremonially hoisted, and a series of events and workshops are held to honor the resistance against genocide, while fostering dialogue on Tamil history, culture, and identity.

These activities aim to raise awareness, celebrate the significance of Flag Day, and foster a sense of shared understanding and solidarity among Eelam Tamils, Brampton residents, and the broader community.

**THEREFORE:** I, Mayor Patrick Brown, on behalf of Brampton City Council, do hereby proclaim November 21, 2025, as "Tamil Eelam National Flag Day" in the City of Brampton.

Mayor Patrick Brown, City of Brampton




படம் : இணையம்

### ஈழத் தமிழர் மனம் வென்ற பற்றிக் பிரவுண்

இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உண்மையும் நீதியும் வெளிப்படுவதில் சிரத்தை கொண்ட நாடாக மதிப்புப் பெற்ற கனடா உலகின் உன்னத தேசங்களில் ஒன்றாக ஈழத் தமிழர்களால் மதிக்கப்படுகிறது. உலகின் தலை சிறந்த நாடு என்ற அடையாளத்தை கனடா தனதாக்கிக் கொண்ட கனடா ஈழத் தமிழ் மக்களின் நீதிக்கான விடயத்தில் தன்நலன் சார்ந்து சிந்திக்கும் உலக நாடுகள் கனடாவை முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதை முன்னைய காலத்திலம் தமிழ் தேசிய ஆய்வு அமையம் வலியுறுத்தி உள்ளது.

இந்த நிலையில் கனடாவின் பிரம்டன் நகரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிக்கொடியை அங்கீகரித்தமைக்கான பிரகடனத்தை பிரம்டன் மாநகர மேயர் பற்றிக் பிரவுண் உத்தியோகபூர்வமாக கடந்த நவம்பர் 21ஆம் நாளன்று வெளியிட்டு வைத்தார். இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்கான சான்றுப் பத்திரமும் கையளிக்கப்பட்டதுடன், புலிக் கொடியும் உத்தியோகபூர்வமாக பற்றிக் பிரவுண் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. மேயர் பற்றிக் பிரவுண் அங்கீரித்து வழங்கியுள்ள அறிவிப்பில், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் புலிக்கொடி தினத்தை நினைவுகூருகின்றனர். இந்த நாள் ஈழத்தமிழ் தேசத்தின் கூட்டு அடையாளத்தையும் 1930 களில் இருந்து தங்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு எதிரான அவர்களின் தொடர்ச்சியான எதிர்பார்ப்பையும் குறிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

### இனப்படுகொலைக்கு எதிரான குரல்

இதன் வாயிலாக ஈழத் தமிழர்களுக்கான உரிமைக்கும் நீதிக்கும் குரல் கொடுப்பதையும் பிரம்டன் நகர் வலியுறத்துகிறது. உலகளாவிய தமிழர் உரிமைகளின் குரல் என்பது தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிக்காக வாதிடுவதற்கும், தமிழ் வரலாற்றைப் பாதுகாப்பதற்கும், காப்பகப்படுத்துவதற்கும் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மேம்படுத்துவதற்குமானதொரு அமைப்பாகும். இந்நாளில், புலிக்கொடி சம்பிரதாயமாக ஏற்றப்படுவதோடு இனப்படுகொலைக்கு எதிரான எதிர்ப்பை மதிக்கும் வகையில் தொடர்ச்சியான நிகழ்வுகள் மற்றும் பட்டறைகள் நடத்தப்படுகின்றன. அதே நேரத்தில் தமிழ் வரலாறு கலாசாரம் அடையாளம் குறித்த உரையாடல்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கொடி தினத்தின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுதல் மற்றும் ஈழத்தமிழர்கள், பிரம்டன் குடியிருப்பாளர்கள், பரந்த சமூகத்தினரிடையே பகிரப்பட்ட புரிதல், ஒற்றுமை உணர்வை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளமை என்பன அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் இனப்படுகொலை மற்றும் உரிமை சார்ந்த விடயத்தில் கனடா கடந்த 16ஆண்டுகளாக பல செயற்பாடுகளை அதிரடியாக முன்னெடுத்து இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. அதில் இதுவும் முக்கிய செயற்பாடு என்பதை இந்த இடத்தில் குறிப்பிட்டு வரவேற்கின்றோம்.

### இனப்படுகொலைக்கான நினைவுத்தூபி

கனடா தேசத்தில் இலங்கையில் நடந்த இனப்படுகொலையை நினைவுகொள்ளும் விதமாக பாரிய நினைவேந்தல் தூபி கடந்த மே 18 அன்று நிறுவப்பட்டது. தமிழ் ஈழ வரைபடம் கொண்ட குறித்த நினைவேந்தல் தூபியகத்தில் இலங்கையில் நடந்த இனப் படுகொலைகளின் வரலாறு முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை விடயத்தில் கனடா தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் பக்கம் நிற்பதன் அடையாளமாக இது அமைந்த்து. அத்துடன் இச்செயற்பாடு ஈழத் தமிழ் மக்களின் வாழ்வில் விரைவில் விடுதலை கிடைக்கும் கனவு மலரும் இனப்படுகொலைக்கு நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தியது.

கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் கடந்த 2023ஆம் ஆண்டு மே 18இல் வெளியிட்டுள்ள தீர்மானத்தில் இலங்கயைில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்றுக்கொண்டார். அதில் அவர், “நாங்கள் 14 வருடங்களிற்கு பின்னர் துன்பகரமான விதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளை நினைகூறுகின்றோம் என்றும் முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற இனப்படுகொலையில்உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன, பலர் காணாமல்போனார்கள் காயமடைந்தார்கள் இடம்பெயர்ந்தார்கள். கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் மற்றும் அர்த்தமற்ற வன்முறையால் ஏற்பட்ட துயரத்துடன் தொடர்ந்தும் வாழும் அவர்களின் குடும்பத்தவர்கள் குறித்து எமக்கு அக்கறைகள் உள்ளன...” என கனோடிய தேசம் எமக்காகக் குரல் கொடுத்தது.

### ஸ்ரீலங்கா அரசு அதிர்ச்சி

அத்துடன், “கனடாவின் பல சமூகங்களில் நான் சந்தித்த பலர் தமிழ் கனடா பிரஜைகளின் கதைகள் மனித உரிமைகள் சமாதானம் ஜனநாயகம் போன்றவற்றை இலகுவாக கருதமுடியாது என்பதை நினைவுபடுத்தி நிற்கின்றன.

இதன்காரணமாகவே கடந்த வருடம் மே18ம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவுதினமாக நாங்கள் அங்கீகரித்தோம் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மோதலால் கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் உரிமைக்காகவும் இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவர்களிறகாக குரல்கொடுப்பதை கனடா நிறுத்தாது...” என்றும் கனடா கூறியது ஶ்ரீலங்காவுக்கு அதிர்ச்சியானது.

இலங்கையில் பிரிவினைவாத கொள்கைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்களை அங்கீகரித்தல் மற்றும் இலங்கையில் உள்ள இன சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்த முற்படும் செயற்பாடுகள் ஆகியவற்றைத் தடுப்பதற்கான அவசியத்தை கனடிய அரசாங்கத்திற்கு எடுத்துரைக்குமாறு ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஸ்ரீலங்காவுக்கான கனேடிய தூதர் இசபெல் கத்ரீன் மார்ட்டினிடம் வலியுறுத்தியுள்ளமை ஸ்ரீலங்கா அரசின் பீதியின் வெளிப்பாடாகும்.

விரைவில் தமிழர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும், தமிழர் தேசம் மலரும் என்பதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்டுகிறோம்...” என அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.










# 2025ஆம் ஆண்டு நடைபெற்ற மாவீரர் நாள் பதிவுகள் சில…





















# ஷேய்க் ஹஸீனாவுக்கு தண்டனை
# இராஜதந்திர நெருக்கடியின் தீவிரம்

பூமிகன்

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேய்க் ஹஸீனாவிற்கு டாக்காவிலுள்ள நீதிமன்றம் மரண தண்டனை விதித்து, பின்னர் அதனை வாழ்நாள் சிறைவாசமாக மாற்றிய தீர்ப்பு, தெற்காசியாவில் ஒரு தீவிர இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு மாணவர்களால் வழிநடத்தப்பட்ட மக்கள் எழுச்சியை அடக்குவதற்காக ஹஸீனா ‘மனிதபிமானத்திற்கு எதிரான குற்றங்களைப்’ புரிந்ததாகக் கூறி அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் என்ற பெயரில் இயங்கும் விசேட நீதிமன்றத்தில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால், அவர் வாழ்க்கையின் இறுதிக்கணம் வரை சிறைவாசம் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எழுச்சியின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து, கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் திகதி பங்களாதேஷில் இருந்து தப்பிச் சென்ற ஷேய்க் ஹஸீனா, இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அவர் இன்று வரை இந்திய அரசாங்கத்தின் தயவில் வாழ்கிறார்.

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம், ஹஸீனாவை நாடு கடத்தி, அவர் பங்களாதேஷில் தண்டனையை அனுபவிக்க இடமளிக்குமாறு இந்தியாவிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்திருக்கிறது. இந்தக் கோரிக்கைக்கு இந்திய அரசாங்கத்திடம் நேரடி பதில் இல்லை.

மழுப்பலான ராஜதந்திர வார்த்தைகளைப் பிரயோகித்து, ஹஸீனாவை நாடு கடத்துவதில் உள்ள தயக்கத்தை இந்திய அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது. இது வெறும் சட்டப் பிரச்சனை அல்ல் இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் நெற்றிப் பொட்டில் தாக்கி, அயல்நாடுடனான உறவின் எதிர்கால நகர்வைத் தீர்மானிக்கப் போகும் ஒரு பூகோளவியல் புதிர் என்று கூறலாம்.

குற்றவாளியை நாடு கடத்துவது தொடர்பில் 2013இல் இருநாடுகளும் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், ஷேய்க் ஹஸீனாவை திருப்பி அனுப்ப வேண்டுமென பங்களாதேஷ் அரசாங்கம் கோருகிறது.

ஹஸீனா மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியெனில் (தற்போது வாழ்நாள் சிறைவாசம்), அவரை பங்களாதேஷிடம் திருப்பி ஒப்படைப்பது இந்தியாவின் கடப்பாட்டுடன் கூடிய பொறுப்பென பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சு கூறுகிறது.

குற்றவாளிக்குத் தொடர்ந்தும் புகலிடம் அளிப்பது நட்புறவைப் பாதிக்கும் செயல் என்ற வாசகம் அடங்கிய அறிக்கையொன்றையும் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ளது. ஹஸீனாவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. எனவே, குற்றவாளிகளை நாடு கடத்துதல் தொடர்பான இருதரப்பு உடன்படிக்கையைப் பிரயோகித்து, பங்களாதேஷின் இடைக்கால அரசு இந்தியாவின் மீது அழுத்தம் தொடுப்பதன் தாற்பர்யத்தை புரிந்து கொள்ள முடியும்.

பங்களாதேஷின் கோரிக்கைக்கு இந்திய அரசாங்கம் சுற்றி வளைத்து பதில் கூறுகிறது. அந்நாட்டின் வெளிநாட்டு



அலுவல்கள் அமைச்சு விடுத்த அறிக்கையில், வெறுமனே பங்களாதேஷ் மக்களின் ஆர்வத்தில் அக்கறை கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, உறுதியான பதில் இல்லை.

நாடு கடத்தல் பற்றிய வார்த்தையே கிடையாது. இந்த மௌனமானது, இந்தியா சட்டத்தை தாண்டிய இராஜதந்திரக் காய் நகர்த்தல்கள் பற்றிச் சிந்திக்கிறது என்பதைக் காட்டுகிறது. இந்தியா சட்டத்தில் உள்ள ஓட்டைகளை தனக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ள முனையக்கூடும்.

பங்களாதேஷ_டன் ‘குற்றவாளிகளை நாடு கடத்தும் உடன்படிக்கையை’ செய்து கொண்டபோது, தமக்குச் சார்பான நிபந்தனைகள் சிலவற்றை சேர்த்துக் கொள்ள இந்தியா தவறவில்லை. இந்த நிபந்தனைகள் மூலம் இந்தியாவின் கை மேலோங்குகிறது. ஹஸீனாவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இந்தியாவின் உள்ளூர் சட்ட வரம்புகளுடன் பொருந்தாதெனக் கூறி, அல்லது குற்றவாளிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நியாயமற்றவை, ஒடுக்குமுறை மிக்கவை என நிரூபிக்கக்கூடியதாக இருக்கும் பட்சத்தில், அவரை நாடு கடத்தும் கோரிக்கையை நிராகரிக்க முடியும்.

குறிப்பாக, குற்றம் அரசியல் தன்மையுடையதென நிரூபிக்கப்படும் பட்சத்தில் இந்தியா குற்றவாளியை நாடு கடத்தாமல் இருக்கலாம். எதிர்வரும் பெப்ரவரி மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஷேய்க் ஹஸீனாவின் அவாமி லீக் கட்சி போட்டியிட முடியாதவாறு அந்தக் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, இந்த வழக்கு அரசியல் நோக்கமுடையது என நிரூபிப்பது எளிதானது.

பங்களாதேஷின் கோரிக்கைக்கு இந்திய அரசாங்கம் மழுப்பலான பதில் சொல்லி சமாளிப்பதன் பின்னணியில் பிராந்திய உறவுகள் சார்ந்த கேந்திர நலன் என்ற கோணமும் உள்ளது. ஷேய்க் ஹஸீனாவின் கடைசி 15 வருடகால ஆட்சியை இந்தியாவிற்கும், பங்களாதேஷிற்கும் இடையிலான உறவுகளின் பொற்காலம் என்று கூறலாம்.

பாதுகாப்பு, வர்த்தகம் ஆகிய துறைகளில் இந்தியா நம்பகத் தகுந்த உறவாக ஹஸீனா திகழ்ந்தார். பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை சமாளிப்பதற்கும் அவர் இந்தியாவிற்கு உறுதுணையாக இருந்தார். ஹஸீனா பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து ஆட்சி பீடமேறிய இடைக்கால அரசாங்கம் அப்படிப்பட்டது அல்ல.

அந்த அரசாங்கம் பாகிஸ்தானுடன் நல்லுறவுகளை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டுவதைப் போன்று தென்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் ஹஸீனாவை இடைக்கால ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்தல் என்பது, நம்பிக்கையான உறவை கைவிடுவதற்கு ஒப்பானதாக இருக்கும். அத்தகைய நகர்வு, இந்தியாவை விரும்பாத சக்திகளை வலுப்படுத்துவதாகவும் அமைந்து விடும்.

இவை அனைத்தையும் தாண்டி, ஷேய்க் ஹஸீனாவை நாடு கடத்துவதில் இந்திய அரசாங்கத்திற்கு உள்ள தயக்கத்தை இன்னொரு கோணத்திலும் பார்க்க வேண்டியிருக்கிறது. இது இ;ந்தியாவிற்கும், ஹஸீனாவிற்கும் இடையிலான தனிப்பட்ட முறையிலான மற்றும் வரலாற்று ரீதியான உறவு சார்ந்த கோணம்.

பங்களாதேஷின் சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று வழிநடத்திய முஜிபுர் ரஹ்மானும், அவரது குடும்பத்தவர்களும் கொல்லப்பட்ட பின்னர், அவரது புதல்விகள் இருவர் ஜெர்மனியில் அநாதைகளாக நின்றபோது, ஹஸீனாவிற்கும், அவரது சகோதரி ரெஹானாவிற்கும் தஞ்சம் அளித்தது வேறு யாருமல்ல,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி தான். ஹஸீனா பல வருடகாலம் டெல்லியில் வாழ்ந்தார். அவருக்கும் டெல்லிக்கும் இடையில் ஆத்மார்த்தமான பிணைப்பொன்று உள்ளது. இந்தப் பிணைப்பு சட்டங்களையும், இராஜதந்திர உறவுகளையும் தாண்டிச் செல்லக்கூடியது. இது இந்தியாவின் தார்மீகக் கடப்பாட்டை உரசிப் பார்க்கும் பிணைப்பெனக் கூறினாலும் தவறில்லை.

ஷேய்க் ஹஸீனாவை நாடு கடத்த வேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவைப் பொறுத்தவரையில் கயிற்றில் நடப்பதைப் போன்றது தான். அதனை சட்டரீதியாக நிராகரிக்கக்கூடிய வாதங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். மறுபுறத்தில் பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில், ஹஸீனாவை திருப்பி ஒப்படைக்காமலும் இருக்கலாம். வரலாற்று ரீதியாக ஆராய்கையில், ஹஸீனாவிற்கு அரசியல் ரீதியாக தஞ்சம் அளிக்கக்கூடிய கடப்பாடு உள்ளதெனவும் இந்தியா நினைக்கலாம்.

ஆனால், இந்த விடயத்தில் இந்தியா மேற்கொள்ளும் எந்தவொரு தீர்மானமும் தனிநபரின் தலைவிதியை தீர்மானிப்பதாக மாத்திரம் இருந்து விடாது. மாறாக, இது இந்தியாவிற்கும் பங்களாதேஷிற்கும் இடையிலான உறவுகளை மீளமைத்து, தெற்காசிய பிராந்தியத்தின் வல்லரசாக அதன் நிலையைத் தீர்மானிக்கக்கூடியதாகவும் இருக்கும்.



# நமது ஈழநாட்டின் உதவிக்கரம்







நமது ஈழநாடு வாழ்வதார உதவித்திடடத்தில் இம்முறை புதுக்குடியிருப்பு, பேத்தாழை மற்றும் வாழைச்சேனை கிராமங்களை சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மாவீரர் குடும்பங்களுக்கு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பட்டில் செயற்பாட்டாளர் கிருஷ்ணமூர்த்தி அஜன் அவர்களின் அறுபதாயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் மேற்படி கிராமங்களை சேர்ந்த 12 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதிகள் வாழங்கி வைக்கப்பட்டன.




